**OS 1776/2023**

**DW1 - சரவணன்** **Date: 08.01.2025**

**Cross Examination**

வாதி ராஜேஸ்வரி மற்றும் 3ம் பிரதிவாதி தேவி என்னுடைய உடன் பிறந்த சகோதரிகள் . 1ம் பிரதிவாதி என்னுடைய தாயார். நானும் 1ம் பிரதிவாதியும் ஒரே விலாசத்தில் தான் வசித்துவருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் எண் 51/22 இவிகே சம்பத் சாலை, வேப்பேரி, சென்னையில் வசித்துவருகிறோம். என்னுடைய தந்தை 28/11/2012ல் காலாமானார். அன்றைய தேதியிலிருந்து என்னுடைய தாயார் என்னுடன் தான் இருக்கிறார். அவர் என்னுடைய பராமரிப்பில் தான் இருக்கிறார். நான் B.Com வரை படித்துள்ளேன். தாவா சொத்தில் நாங்கள் குடியிருக்கவில்லை. தாவா சொத்து தரை மற்றும் முதல் தளம் உள்ளது. அதில் தரைதளத்தில் ஒரு வாடகைதாரர் இருந்தார் .அவர் பெயர் ராம்தேவ். தரைதளத்தில் அவர் அலுவலகம் வைத்துள்ளார். முதல் தளத்தில் அவர் குடியிருக்கிறார். அதற்கு மொத்தமாக ரூ.35,000 வாடகை செலுத்துகிறார். என்னால் அந்த வாடகை ஒப்பந்தத்தை நீதிமன்றதில் தாக்கல் செய்யமுடியும். நான் வருமானவரி செலுத்திவருகிறேன். எனக்கு 3 வங்கி கணக்குகள் உள்ளன. ராம்தேவ் 2வருடமாக குடியிருக்கிறார். காசோலை என் பெயரில் தான் அவர் கொடுப்பார். அதற்கு முன் சுபாஷ் என்பவர் தான் வாடகைதாரராக இருந்தார். அதற்கு முன் 2 பகுதியாக வாடகைக்கு விடப்பட்டிருந்தது. ஒரு பகுதிக்கு தலா 19000 என்று வாடகை விடப்பட்டிருந்தது. தாவா சொத்திற்கு 1லட்சம் ரூபாய் வாடகை வருகிறது என்றாலும் நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரின் அனைத்து செலவுகளும் நான் பார்த்துவருகிறேன். மற்ற சகோதரிகளுக்கு நான் வாடகை பணத்திலிருந்து நான் எந்த தொகையும் கொடுப்பதில்லை. தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது

நான் ஒரு மைனர் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 28/10/2001 தேதியிட்ட கடிதம் நான் எழுதியது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதான். அது வா சா 9. அந்த கடிதத்தில் பக்கம் 2ல் என் தந்தை வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன். அதைதவிர்த்து இதர விவரங்களும் சொல்லியுள்ளேன். தகப்பனார் உடன்பிறந்த சகோதர்கள் பெயர் சண்முகம் மற்றும் கந்தசாமி. அதில் தற்போது கந்தசாமி மட்டும் உயிருடன் உள்ளார். அவர் என்னுடைய சித்தப்பா. எங்கள் இதர குடும்பசொத்து சமந்தமாக தாராபுரம் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நானும் என்னுடைய Cousins-ம் செய்த business சமந்தமாக இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சமந்தமாக வாங்கிய கிரையப்பத்திரத்தை நான் படித்துப்பார்த்ததில்லை. வாசா 3 ஆவணத்தில் என் தந்தைதான் கிரையத்தொகை செலுத்தியதாக உள்ளது என்றால் நிர்மலா ஸ்டோர் மூலம் வந்த வருமானத்தை வைத்துதான் அந்த கிரையம் வாங்கப்பட்டது. தாவா சொத்து பக்கத்தில் என் பெரியப்பா மற்றும் சித்தப்பா- வின் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் அனைத்து வரிகளும் என் தந்தை பெயரில் தான் உள்ளன. நான் 2012 முதல் நான் பெயர்மாற்றம் செய்ய முயற்சி எடுக்கவில்லை என்றால் அனைத்து வாடகைகளும் நிர்மலா ஸ்டோர்ஸ் பெயரில் டெபாசிட் செய்யப்படுவதால் நான் முயற்சி மேற்கொள்ளவில்லை. தாவா சொத்தின் வாடகைப்பணம் குடும்ப வருமானம் என்னுடைய பெரியப்பா சித்தப்பா பிள்ளைகளுடன் 2020 வரை பங்கிட்டுக்கொண்டு இருந்தோம். அதன்பின் எங்களுக்கும் சகோதர்களுக்கும் தகறாறு ஏற்பட்டதால் நான் அந்த பணத்தை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தேன். நிர்மலா ஸ்டோர்ஸ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் தான். அந்த நிறுவனத்தில் வாதி ராஜேஸ்வரி மற்றும் 3ம் பிரதிவாதி அல்லது என்னுடைய தாயார்

பங்குதாரர் கிடையாது. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு 2666/2022 என்ற வழக்கு Arbitration clause இருந்ததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின் நாங்கள் Arbitration-க்கு முயற்சி செய்யவில்லை. நாங்கள் சமாதானம் பேச முயற்சி செய்துள்ளோம். நிர்மலா ஸ்டோர்ஸக்கும் நிர்மலா சில்கிற்கும் வாதிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லாததால் வாதி தாக்கல் செய்த வழக்கை திசைத்திருப்பும் நோக்கத்தோடு தான் நான் அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாராபுரம் தாக்கல் செய்த அசல் வழக்கு OS 424/2022 என்னுடைய தயார் மற்றும் 2 சகோதரிகளும் தங்களுக்கு உண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்கும் படி சமர்பத்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் மட்டும் அந்த வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் மற்றும் அவருடைய 2 சகோதரர்கள் தனிதனியாக வசித்துவந்தார்கள் என்றால் சரியல்ல. ஒன்றாக தான் இருந்தார்கள். கூட்டுக்குடும்பமாக இருந்ததாக எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாராபுரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நானும் என்னுடைய சகோதரர் பாலாஜியும் படிக்கும் காலத்திலிருந்தே கடையில் பணியாற்றிருக்கிறோம். எனக்கும் என்னுடைய சகோதரர் பாலாஜி மற்றும் கார்த்திகேயனுக்கு இருக்கும் பிரச்சனையால் வாதிக்கு பங்கு தர மறுப்பது சரியல்ல என்று சொன்னால் தவறு.

(வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோலுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt.08.01.2025 II Addl. District Judge.

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S 1776/2023

Deposition of witness

| | | |
|---|---|---|
| Name | : Saravanan | DW1 |
| Father Name | : D. Balasubramaniam | |
| Age/Sex | :50 | |
| Adress | : No. 22, EVK Sampath Road, Veppery, Chennai-07 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of January 2025

---

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் முதலாம் பிரதிவாதியாவேன். நான் என்னுடைய தரப்பில் முதல் விசாரணைக்கான சத்தியப்பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் மற்றும் உண்மை என்றும் உறுதியளிக்கிறேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தவைக்கப்படுகிறது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt.08.01.2025 II Addl. District Judge.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 08.01.2025 II Addl. District Judge.